தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை–600 035.

தொலைபேசி எண்.044–2951 5590

ஆணை நாள். 02.11.2026

முன்னிலை

திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,

மாநில தகவல் ஆணையர்

*****

வழக்கு எண் : CP- 4036/A/2024

திரு.P.ரமேஷ் .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர், ,
வட்டாட்சியர் அலுவலகம்,
சங்ககிரி வட்டம்,
சேலம் மாவட்டம் – 637 301. .. பொது அதிகார அமைப்பு

ஆணை

மேற்குறிப்பிட்ட வழக்கு 02.11.2026 அன்று ஆணையத்தில் வைத்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு.P.ரமேஷ், அவர்கள் QR Code மூலம் தொலைபேசி வாயிலாக காணொளியில் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, திரு.து.பிரபு பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், ,வட்டாட்சியர் அலுவலகம்,சங்ககிரி வட்டம், சேலம் மாவட்டம் அவர்கள் இன்றைய விசாரணைக்கு நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 20.05.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)–ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம் , ஏகாபுரம் கிராம நிர்வாக அலுவலகத்தில் உள்ள நிலங்கள் தொடர்பான அனைத்து ஆவணங்கள் மற்றும் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பணிப்பதிவேடுகள் ஆவணங்களை பார்வையிட்டு தேவையான அரசு சார்ந்த பொது ஆவண தகவல்களை எடுத்து கொள்ள அனுமதி வழங்கக் கோரி விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் 28.05.2024 நாளிட்ட வட்டப்பிரிவு 6 (3)–ன் கீழ் மனுவை பொது தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர் , வட்டாட்சியர் அலுவலகம், சங்ககிரி வட்டம் மாற்றப்பட்டு மனுதாரருக்கு தகவல்

தெரிவிக்கப்பட்டுள்ளது. பொது தகவல் அலுவலர் 28.06.2024 நாளிட்ட கடிதத்தின் மூலம் பதில் வழங்கியுள்ளார். பொது தகவல் அலுவலர் பதில் திருப்தி அளிக்காத காரணத்தினால் மனுதாரர் 29.06.2024 நாளிட்ட பிரிவு 19(1)–ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளார். மேல் முறையீட்டு அலுவலர் பதில் வழங்காத காரணத்தினால் மனுதாரர், 02.09.2024 நாளிட்ட பிரிவு 18(1)–ன் கீழ் புகார் மனுவை தாக்கல் செய்துள்ளார்.. அப்புகார் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 02.11.2026 முற்பகல் ஆணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய தகவல்களை ஏற்கனவே 28.06.2024 மற்றும் 30.10.2026 நாளிட்ட கடிதங்கள் வாயிலாக தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 2J இன் கீழ் பார்வையிட்டு தகவல்களை பெற்றுக் கொள்ள அனுமதி வழங்கியுள்ளதாகவும், ஆனால், மனுதாரர் பார்வையிட்டு முழுமையான தகவல்களைப் பெற்றுக் கொள்ளவில்லை எனவும், ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க மனுதாரர் பார்வையிட்டு, தனக்கு தேவைப்படும் தகவல்களை குறிப்பிட்டுக் கோரும் பட்சத்தில் உரிய நகலெடுத்து, சான்றொப்பமிட்டு வழங்குவதாக ஆணையத்தில் உறுதியளித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் தனக்கு எவ்வித தகவல்களையும் இதுநாள் வரையில் வழங்கவில்லை எனவும், உரிய காலத்திற்குள் தகவல் வழங்காத பொதுத் தகவல் அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு, தனக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்கு ஈடாக இழப்பீடு வழங்குமாறு ஆணையத்தைக் கேட்டுக் கொண்டார். மேலும், தனக்கு முழுமையான தகவல்களை தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 2(J)இன் கீழ் பார்வையிட்டு பெற்றுக் கொள்ள அனுமதி வழங்குமாறு ஆணையத்தைக் கேட்டுக் கொண்டார்.

6. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரர் ஆஜராகாத காரணத்தால் மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத் தகவல் அலுவலரின் தகவலையும் இணைத்துப் பரிசீலனை செய்கையில் மனுதாரர் கோரும் தகவல்களுக்கு பொதுத் தகவல் அலுவலரால் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 2(J)இன் படி பார்வையிட்டு தேவையான தகவல்களை குறிப்பிட்டுக் கோரும் பட்சத்தில் பெற்றுக் கொள்ள அனுமதி வழங்கப்படவில்லை எனத் தெரிய வருகிறது. எனவே ஆணையம் பொதுத் தகவல் அலுவலருக்கு இறுதி வாய்ப்பளித்து, கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கிறது:–

- ***மனுதாரரின் மனு பெறப்பட்டு ஏறக்குறைய 2 ஆண்டுகளுக்குப் பிறகு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் படி ஒரு பொது அதிகார அமைப்பின் பொதுத் தகவல் அலுவலராக இருக்கக் கூடிய உயர் அதிகாரி சட்டப்படி அலுவலகத்தில் இருக்கக் கூடிய ஆவணங்களில் உள்ள நகல்களை எடுத்துக் கொடுக்க வேண்டிய பொறுப்பில் உள்ள அப்போதைய மற்றும் தற்போதைய பொதுத் தகவல் அலுவலர்கள் மனுதாரர் பிரிவு 6(1)இல் கோரியுள்ள தகவல்களை 30 நாட்களில் கொடுக்க வேண்டும் என்பதை புறந்தள்ளிவிட்டு, தகவல் பெறும் உரிமைச் சட்டத்தினை உதாசீனப்படுத்தி, மனுதாரருக்கு மிகுந்த மன உளைச்சல் ஏற்படுத்தி, தீய நோக்கத்துடன் செயல்பட்டுள்ள பொதுத் தகவல் அலுவலரின் இச்செயலினை இவ்வாணையம் வன்மையாக கண்டிக்கிறது.***

- ***மனுதாரருக்கு 30 நாட்களுக்குள் தகவல் வழங்க வேண்டும் என்ற தகவல்பெறும் உரிமைச் சட்டத்தின் மாண்பினை புறந்தள்ளிவிட்டு, உரிய***

காலத்திற்குள் முழுமையான தகவல் வழங்காமல் இருந்த அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் அவர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்ட பிரிவு 20(1)ன் கீழ் நாள் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் ரூ25,000/- தண்டம் ஏன் விதிக்கக்கூடாது மற்றும் பிரிவு 20(2)இன் கீழ் துறை ரீதியான நடவடிக்கை ஏன் மேற்கொள்ளக் கூடாது என்பதற்கான அவரது எழுத்துமூல விளக்கத்தினை ஆணையத்திற்கு 24.11.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது. மேற்படி ஆணையை அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு சார்வு செய்ய தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

- *தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 அனுமதித்திருக்கும் 30 நாட்களில் பொதுத் தகவல் அலுவலர், தகவல் தர இயலாத சூழ்நிலைக்கு தகுந்த காரண விளக்கங்கள் (*Violation of the Act) *இவ்வாணையத்தின் விசாரணையில் தெரிவிக்காத காரணத்தாலும்,*
- *பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்காமல் இருப்பதற்கு ஏற்புடைய அல்லது நியாயமற்ற தாமதத்தை (*Unreasonable delay) *இவ்வாணையத்தின் விசாரணையில் நிருபிக்காத காரணத்தாலும்,*
- *பொதுத் தகவல் அலுவலர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005இன் கீழ் மனுதாரர் கோரிய தகவல்களுக்கு முழுமையான தகவல் வழங்காமல் தவறான மற்றும் திசைதிருப்பும் நோக்கில் தகவல் வழங்கியுள்ளதால்* Providing False and Misleading information / Incomplete Information)
- *பொதுத் தகவல் அலுவலரால் ஏற்படுத்தப்பட்ட தேவையற்ற தொந்தரவு மற்றும் தேவையற்ற சிரமத்தினால் (*Harrasment or Unnecessary inconvenience caused) *மனுதாரருக்கு ஏற்பட்ட மனஉளைச்சல் மற்றும் உடல் பாதிப்பினால் தன்னுடைய குடும்பம் மற்றும் தனது வருமானம் பாதிக்கப்பட்டுள்ள காரணத்தாலும்*
- *மேலும் மனுதாரர் தனக்கு உரிய காலத்திற்குள் வழங்காமல் தனக்கு ஏற்பட்ட மனஉளைச்சலை ஈடுசெய்யும்பொருட்டு பொது அதிகார அமைப்பு மீது நடவடிக்கை மேற்கொள்ளவும், உரிய நஷ்டஈடு வழங்க வேண்டியும் ஆணையத்தின் விசாரணையில் தெரிவித்தன் அடிப்படையில் மனுதாரரின் கோரிக்கையினை ஆணையம் ஏற்று, மேற்படி தகவல்கள் வழங்காததால் மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள மனஉளைச்சலை ஈடுசெய்யும் பொருட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் மனுதாரருக்கு உரிய காலத்திற்குள் தகவல் வழங்காத பொது அதிகார அமைப்பு தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, சட்டப்பிரிவு 19(8)(b)-ன் கீழ் மனுதாரருக்கு இழப்பீடாக ரூ.2,000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) வழங்கவும், மேற்படி தொகையினை மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஆதாரத்துடன் கூடிய அறிக்கையின் நகலினை இவ்வாணையத்திற்கு 24.11.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு, தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.*
- *மனுதாரர் 6(1) மனுவில் கோரிய முழுமையான தகவல்களை இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரு வார காலத்திற்குள் மனுதாரருக்கு அறிவிப்பு கடிதமொன்றை அனுப்பி, அலுவலக வேலை நாளில், வேலை நேரத்தில் இதர அலுவலகப் பணிகளுக்கு குந்தகம் ஏற்படாவண்ணம் அலுவலகம்*

வரவழைத்து மனுதாரரின் ஆய்வுக்கு சட்டப்பிரிவு 2(j)ன்படி ஆஜர்படுத்தி, மனுதாரர் ஆய்வு செய்வதை வீடியோ அல்லது புகைப்படம் எடுத்து, ஆய்வு செய்த பின்னர் அவர் தனக்கு தேவைப்படும் தகவலை குறிப்பிட்டு கோரும்பட்சத்தில் அதனை ஒளிநகலெடுத்து, உரிய சான்றொப்பமிட்டு, தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 சட்டப்பிரிவு 7(6)-ன் கீழ் கட்டணமின்றி வழங்கி, மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் ஆய்வு செய்த வீடியோ அல்லது புகைப்படத்தையும் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 24.11.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகின்றது.

ஒம்/- (வி.பி.ஆர். இளம்பரிதி)
மாநில தகவல் ஆணையர்

//ஆணைப்படி//

உதவிப் பதிவாளர்

வழக்கு எண் CP- 4036/A/2024

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர், ,
வட்டாட்சியர் அலுவலகம்,
சங்ககிரி வட்டம்,
சேலம் மாவட்டம் – 637 301

மனுதாரர்:
திரு.P.ரமேஷ்
5/96 மோட்டூர்,
ஏகாபுரம் அஞ்சல்,
சங்ககிரி தாலுகா,
சேலம் மாவட்டம் – 637 502.

Copy to File
Je/PA 02.11.2026